

100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், படப்பையில் கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

### கிறிஸ்தவ சகோதரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வரும்


# கழக அரசு சிறுபான்மையினரின் உண்மைத் தோழனாக - உரிமைக் காவலனாக இருக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்து!

சென்னை, டிச.25

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**அன்புக்கும் பொறுமைக்கும் கருணைக்கும் உலகம் முழுக்க அடையாளமாகத் திகழும் இயேசு நாதர் பிறந்தநாளைக் கொண்டாடி மகிழ்ந்திடும் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**



**“இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு” என்ற வள்ளுவப் பெருந்தகை காட்டிய குறள் நெறியினைப் போலவே, அன்பின் வடிவாக நின்று, ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் காட்டுங்கள் என்று கூறியதோடு மட்டுமின்றி அவ்வாறே வாழ்ந்தும் காட்டியவர் இயேசு பெருமான் அவர்கள்!**

**தமிழ்நாட்டில் உள்ள கிறிஸ்தவ சகோதரர்களின் உரிமைகளுக்காகவும், அவர்தம் வளர்ச்சிக்காகவும் நாள்தோறும் திட்டங்களைத் தீட்டி, அவர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரும் அரசாக நமது ‘திராவிட மாடல்’ அரசு திகழ்ந்து வருகிறது.**

**கழக அரசு என்றுமே சிறுபான்மையின மக்களின் உண்மைத் தோழனாகவும் உரிமைக் காவலனாகவும் இருக்கும். அவர்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் அரசாக இந்த திராவிட மாடல் அரசு விளங்கி வருகிறது. எல்லாருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படிதான் என்றுமே இந்த ஆட்சி தொடரும்.**

**இயேசுபிரான் காட்டிய அன்பு வழி மற்றும் சகோதரத்துவம் ஆகிய நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்து வரும் அனைத்துச் சகோதரர்களுக்கும் இனிய கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விக்டோரியா பொது அரங்கம் திறப்பு!

# சென்னையின் நினைவுகளை கண்முன்னே நிறுத்தியது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 25 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சென்னையின் வரலாற்றுச் சின்னத்துக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் திறக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கம் பல்வேறு நினைவுகளை கண் முன்னே நிறுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.**

தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தை நேற்று முன்தினம் (23.12.2025) திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



விக்டோரியா பொது அரங்கம் சென்னையின் வரலாற்றுச் சின்னத்துக்குப் புத்துயிர்!

நாடு போற்றும் நமது திராவிட மாடலின் ஆதிவிதையான நீதிக்கட்சி தொடக்கம், சென்னையில் முதல் திரைப்படத் திரையிடல், தேசியத் தலைவர்களின் உரைகள் ஒலித்தது என எத்தனையோ பெருமைகளைக் கொண்ட விக்டோரியா பொது அரங்கத்தைத் தொன்மை மாறாமல் புதுப்பித்துத் திறந்து வைத்துள்ளோம்!

சென்னை நகரின் பல நினைவுகளை மீண்டும் உயிர்ப்பித்து நம் கண்முன் நிறுத்தும் கண்காட்சியும் சிந்தையைக் கவர்ந்தது!

மேலும், ரிப்பன் மாளிகை வளாகத்தில் கட்டப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடத்திற்கும் அடிக்கல் நாட்டினேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஒரிசாவில் இந்து அமைப்பினர் வெறியாட்டம்!

# கிறிஸ்துமஸ் விழா பொருட்களை விற்கக் கூடாதாம்!

## சாலையோர வியாபாரியை மிரட்டி அராஜகம்!

புவனேஷ்வர், டிச. 25 -

ஒடிசாவில் கிறிஸ்துமஸ் பொருட்கள் விற்ற சாலையோர வியாபாரிக்கு இந்து அமைப்பினர் மிரட்டல் விடுத்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநில தலைநகர் புவனேஸ்வரில் சாலை ஓரத்தில் கிறிஸ்துமஸ் தொப்பி, ஆடை உள்ளிட்ட கிறிஸ்துமஸ் பொருட்களை சிலர் விற்றனர். அப்போது அங்கு வந்த இந்து அமைப்பைச் சேர்ந்த ஒருவர், சாலை ஓர வியாபாரியை அங்கிருந்து புறப்படச் சொன்னார்.

ஏன் என கேட்டதற்கு இது இந்து நாடு, இங்கு கிறிஸ்துவ பொருட்கள் விற்கக் கூடாது என கூறியுள்ளார்.

மேலும், ஜெகன்நாதர் மண்ணில் வேறு யாருக்கும் இடமில்லை என்றும் தொடர்ந்து விற்பனை செய்தால் அனைத்தையும் தூக்கி வீசுவேன் என மிரட்டியுள்ளார்.

இந்த வீடியோவை இந்து நிர்வாகி ஒருவரே பதிவு செய்து இணையத்தில் வெளியிட்டுள்ளார். தற்போது இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி கண்டனங்களைப் பெற்று வருகிறது.

### தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட எஸ்.ஐ.ஆர். பணிகளில்

# பல்வேறு சந்தேகங்கள் - குளறுபடிகள்!

## ‘தி இந்து’ நாளேடு விமர்சனம்!

சென்னை, டிச. 25 -

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட எஸ்.ஐ.ஆர். பணிகளின் விதம் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு புகார் தெரிவித்துள்ளது. இந்த சந்தேகங்களைக் களைய வேண்டியது தேர்தல் ஆணையத்தின் பொறுப்பு மற்றும் கடமை என்றும் அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

எஸ்.ஐ.ஆர்., மூலம் இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் மட்டும் 97 லட்சத்து 38 ஆயிரம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட எஸ்.ஐ.ஆர். பணிகளின் விதம் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது என்று தி இந்து ஆங்கில நாளேடு புகார் தெரிவித்துள்ளது.

தேர்தல் அதிகாரிகள் எஸ்.ஐ.ஆர். பணிகளை மேற்கொண்ட விதத்திலும் பல்வேறு குளறுபடிகள் அரங்கேறியுள்ளது என்று தெரிவித்துள்ள அந்த நாளேடு, எஸ்.ஐ.ஆர். மூலம் 97 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டது குறித்து தேர்தல் ஆணையம் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

6 கோடியே 41லட்சத்துக்கும் மேற்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை விநியோகித்ததாக கூறப்பட்டுள்ளது கேள்விக்குரியதாகவே உள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் படிவங்களை விநியோகிக்க எந்த அதிகாரிகளும் வரவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். வாக்காளர்கள் படிவங்களைப் பெற, உள்ளூர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டபோதும், படிவங்களைப் பெற முடியவில்லை. சில வாக்காளர்கள் படிவங்களை ஆன்லைனில் “வெற்றிகரமாக” சமர்ப்பித்த பிறகும் தங்கள் பெயர்கள் நீக்கப்பட்டதாக அதிருப்தி அடைந்துள்ளனர்.

படிவங்களைப் பெற பி.எல்.ஓ.க்கள், மூன்று முறை வாக்காளர்களை தேடிச் சென்றதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதும் சந்தேகத்தை எழுப்புகிறது. திருவாரூர் மற்றும் திருச்சி போன்ற சில இடங்களில், பி.எல்.ஓ.க்கள் இருமுறை வாக்காளர்களைச் சந்தித்துள்ளனர் என்று தி இந்து ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் மதுரையில், பெரும்பாலும், பி.எல்.ஓ.க்கள் ஒரு முறை மட்டுமே வாக்காளர்களைச் சந்தித்துள்ளனர். நீக்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் குறித்த முழு விளக்கங்கள் தேர்தல் ஆணையத்தின் அறிக்கையில் கூறப்படவில்லை.

இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 27 லட்சம் என அதிகாரிகள் எப்படி முடிவுக்கு வந்தார்கள் என்பதும் சந்தேகங்களை எழுப்புகிறது. இந்த சந்தேகங்களை களைய வேண்டியது தேர்தல் ஆணையத்தின் பொறுப்பு மற்றும் கடமை என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 308 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,டிச.25-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 308 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (24.12.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72, எம் எஸ் முத்துநகர் (மசூதி அருகில்), கன்னிகாபுரம். 2) வட்டம் 72அ, டாக்டர் அம்பேத்கர் நகர் மெயின் தெரு, புளியந்தோப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி. உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ் பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி. சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா. பி. தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜய குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பாக, ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆவடி, இம்மாகுலேட் ஹார்ட் ஆஃப் மேரி பெண்கள் மேல்நிலை பள்ளியில், 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் 556 விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார். உடன் மேயர் ஜி. உதயகுமார், துணை மேயர் சூரியகுமார், அருட்சகோதரி மரிய செல்வி, நிர்வாகிகள் கே.ஜே.ரமேஷ், ஜி. நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெ.வினோத், டாக்டர் ராஜேஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (24.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–142, சைதாப்பேட்டை, மேற்கு ஜோன்ஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் கூடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.